AL/2026/08/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

කෘෂි විද්‍යාව I
விவசாய விஞ்ஞானம் I
Agricultural Science I

08 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினா ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன்** மூலம் காட்டுக.

**1.** இடைப்பண்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் ஓர் உபகரணம்
(1) கலப்பை (2) ஹரோ
(3) கீழ்மண் கலப்பை (4) சுழல் கலப்பை
(5) களைகட்டும் கருவி

**2.** உயர்வு - இழிவு வெப்பமானியொன்றில், இழிவு வெப்பநிலையை அளவிடப் பயன்படுத்தப்படும் திரவம்
(1) இரசம் ஆகும். (2) அசெற்றோன் ஆகும்.
(3) எதனோல் ஆகும். (4) மண்ணெண்ணெய் ஆகும்.
(5) மெதனோல் ஆகும்.

**3.** நைதரசனைப் பதிக்கும், மண்ணில் சுயாதீனமாக வாழும் ஒரு பற்றீரியா
(1) அசெற்றோபற்றர் ஆகும். (2) றைசோபியம் ஆகும்.
(3) அனபீனா ஆகும். (4) தயோபசிலசு ஆகும்.
(5) சூடாமொனசு ஆகும்.

**4.** உயிரிப் பசளைகளில் அடங்கியிருப்பவை
(1) NPK மாத்திரம் ஆகும்.
(2) நுண்ணங்கிகள் மாத்திரம் ஆகும்.
(3) நுண்போசணைப் பொருள்கள் மாத்திரம் ஆகும்.
(4) போசணைப் பொருள்கள், நுண்ணங்கிகள் ஆகிய இரண்டு வகைகளும் ஆகும்.
(5) நுண், மா போசணைப் பொருட்கள் ஆகிய இரண்டு வகைகளும் ஆகும்.

**5.** பின்வருவனவற்றில் துளிமுறை நீர்ப்பாசனத்திற்கு மிகப் பொருத்தமான பயிர்,
(1) வெங்காயம் ஆகும். (2) சோயா அவரை ஆகும்.
(3) சலாது (Lettuce) ஆகும். (4) பெல் பெப்பர் ஆகும்.
(5) கரட் ஆகும்.

**6.** பொதுவாக, கிளையொட்டுதல் மூலம் இனப்பெருக்கப்படும் ஒரு பயிர்,
(1) மா ஆகும். (2) தேயிலை ஆகும்.
(3) இறப்பர் ஆகும். (4) லெமன் ஆகும்.
(5) ரம்புட்டான் ஆகும்.

**7.** தாவர இனப்பெருக்கத்தின் போது, வேர்கொள்ளச் செய்வதற்கான ஓமோன் பயன்படுத்தப்படுவது,
(1) குமிழங்களில் ஆகும்.
(2) காற்றில் பதிவைத்தலின் போது ஆகும்.
(3) துண்டுடொட்டின் (Patch budding) போது ஆகும்.
(4) ஆப்பொட்டின் (wedge grafting) போது ஆகும்.
(5) வேர்த்தண்டுக் கிழங்கில் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



8. பயிரின் நீர்த்தேவை உச்சமடைவது,
   (1) வித்து முளைக்கும் பருவத்தில் ஆகும்.
   (2) நாற்றுப் பருவத்தில் ஆகும்.
   (3) பூக்கும் பருவத்தில் ஆகும்.
   (4) காய்கள் பழுக்கும் பருவத்தில் ஆகும்.
   (5) அறுவடை செய்யும் பருவத்தில் ஆகும்.

9. பின்வரும் பச்சைவீட்டு வாயுக்களில் பூகோள வெப்பமடைதல் சாத்தியத்தை **இழிவாகக்** கொண்ட வாயு
   (1) $CH_4$ ஆகும். (2) $CO_2$ ஆகும். (3) $N_2O$ ஆகும்.
   (4) $SF_6$ ஆகும். (5) CFC ஆகும்.

10. இலங்கையில் பண்ணை விலங்கு வளர்ப்பு பிரதானமாக முக்கியம் பெறுவது,
   (1) விவசாயத்துக்குத் தேவையான விலங்கு வலுவைப் பெறுவதற்கு ஆகும்.
   (2) பயிர்செய் நிலங்களை வளப்படுத்துவதற்கான பசளையைப் பெறுவதற்கு ஆகும்.
   (3) மக்களுக்கு புரதம் அடங்கிய உணவை வழங்குவதற்கு ஆகும்.
   (4) சமய நிகழ்வுகளுக்கு விலங்குகளை வழங்குவதற்கு ஆகும்.
   (5) அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு ஆகும்.

11. பேட்டுக்கோழியிலுள்ள அரைப்புப்பையின் (gizzard) பிரதான தொழில்,
   (1) முட்டையோடு உற்பத்தி செய்தல் ஆகும்.
   (2) முட்டை உற்பத்திக்குத் தேவையான அல்புமினைச் (albumin) சுரத்தல் ஆகும்.
   (3) கோழி உண்ணும் உணவை தற்காலிகமாகச் சேமித்தல் ஆகும்.
   (4) குடலின் நலத்துக்குத் துணையான அனுகூலமான நுண்ணங்கிகளின் குடித்தொகையைப் பேணுதல் ஆகும்.
   (5) உணவின் பொறிமுறைச் சமிபாட்டுக்கு உதவுதல் ஆகும்.

12. 'இலீபீக்கின் இழிவு விதி' மூலம் எடுத்துரைக்கப்படுவது,
   (1) இழிவு வழங்கலைக் கொண்ட போசணைக் கூறினாலேயே தாவர வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதாகும்.
   (2) மொத்த போசணைக் கூறுகளின் அளவிலேயே தாவர வளர்ச்சி தங்கியுள்ளது என்பதாகும்.
   (3) எல்லாப் போசணைக் கூறுகளும் சம அளவு முக்கியத்துவம் உடையன என்பதாகும்.
   (4) ஒரேயொரு எல்லைப்படுத்தும் காரணியாக இருப்பது நீர் என்பதாகும்.
   (5) ஒளியினால் தாவரப் போசணை கட்டுப்படுத்தப்படுகிறது என்பதாகும்.

13. விலங்குத் தீன்களில் புரத மிகைநிரப்பிகளுக்கான உதாரணங்களாவன,
   (1) சோளம், சோயா அவரை, அரிசித் தவிடு ஆகியன ஆகும்.
   (2) உடைத்த அரிசி, கோதுமைத் தவிடு, பருப்புக்கோது ஆகியன ஆகும்.
   (3) தேங்காய்ப் பிண்ணாக்கு, சோயா அவரைத்தூள், மீன் தூள் ஆகியன ஆகும்.
   (4) மீன் தூள், இறைச்சித் தூள், என்புத் தூள் ஆகியன ஆகும்.
   (5) இறுங்கு, சோளம், அரிசி ஆகியன ஆகும்.

14. பதியமுறை இனப்பெருக்கத்தின் ஒரு அனுகூலமாக அமைவது, அதன் மூலம் உருவாகும் தாவரங்கள்
   (1) மரபியல் ரீதியாக பல்வகைமை கொண்டவை ஆகும்.
   (2) அளவில் பெரிய பழங்களை உருவாக்குபவை ஆகும்.
   (3) தாய்த் தாவரத்தையொத்தவை ஆகும்.
   (4) வரட்சியைச் சகிக்கக்கூடியவை ஆகும்.
   (5) பெரிய விதானத்தைக் கொண்டவை ஆகும்.

15. கறியுப்புக்கு அயடீன் சேர்த்தல் உதாரணமாக அமைவது,
   (1) கலந்திளக்கமாக்கலுக்காகும். (2) சத்தூட்டலுக்காகும்.
   (3) வளப்படுத்தலுக்காகும். (4) நற்காப்புச் செய்தலுக்காகும்.
   (5) சுவையூட்டலுக்காகும்.

16. மாடுகளிற்கு ஏற்படும் பற்றீரியா நோயொன்றுக்கான உதாரணம்
   (1) சல்மொனெல்லோசிசு (2) புருசெல்லோசிசு (3) கால் - வாய் நோய்
   (4) பாற்காய்ச்சல் (5) வயிற்றுப் பொருமல்

[பக். 3 ஐப் பார்க்க

17. இலங்கையில் புல் நற்காப்பு அவசியமாக அமைவது,
    (1) பண்புத்தரம் குறைவான உண்ணாட்டுப் புற்களின் போசணைப் பெறுமானத்தை அதிகரிப்பதற்கு ஆகும்.
    (2) மேலதிக புல் உற்பத்தியைப் பயன்படுத்துவதற்கு ஆகும்.
    (3) புல்லின் உணவு ரீதியான சுவையை அதிகரிப்பதற்கு ஆகும்.
    (4) மழைகாலத்தில் புல் வீண்விரயமாவதைத் தவிர்ப்பதற்கு ஆகும்.
    (5) விலங்குகளுக்கு தொடர்ச்சியாக போதுமான அளவு உணவு வழங்குதலை உறுதிப்படுத்துவதற்கு ஆகும்.

18. விவசாயிகளின் ஒழுங்கமைப்புகளைக் கண்காணித்தல், குத்தகை விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகியன தொடர்பில் முதன்மையான பொறுப்பை வகிக்கும் அரச நிறுவனம்
    (1) விவசாயத் திணைக்களம் (2) நீர்ப்பாசனத் திணைக்களம்
    (3) கமநல அபிவிருத்தித் திணைக்களம் (4) நெல் சந்தைப்படுத்தல் சபை
    (5) இலங்கை மகாவலி அதிகார சபை

19. பயிர்களில் மதிய வாடல் (midday wilting) பிரதானமாக நிகழ்வது
    (1) உயர் வெப்பநிலையினாலாகும். (2) உயர் ஒளிச்செறிவினாலாகும்.
    (3) உயர் ஆவியுயிர்ப்பினாலாகும். (4) உயர் ஆவியாதலினாலாகும்.
    (5) உயர் ஈரப்பதனினாலாகும்.

20. நோய்கள் அற்ற தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு மிகப் பொருத்தமான முறை
    (1) வித்துக்கள் மூலம் இனப்பெருக்கல் ஆகும்.
    (2) தண்டுத்துண்டங்கள் மூலம் இனப்பெருக்கல் ஆகும்.
    (3) பதிவைத்தல் மூலம் இனப்பெருக்கல் ஆகும்.
    (4) நுண்முறை மூலம் இனப்பெருக்கல் ஆகும்.
    (5) கிளையொட்டுதல் மூலம் இனப்பெருக்கல் ஆகும்.

21. வெற்றிகரமான வித்து முளைத்தலுக்கு அத்தியாவசியமான காரணிகள்
    (1) ஒளியும் $O_2$ உம் ஆகும். (2) ஈரலிப்பும் $O_2$ உம் ஆகும்.
    (3) $CO_2$ உம் ஈரலிப்பும் ஆகும். (4) ஒளியும் வெப்பநிலையும் ஆகும்.
    (5) வெப்பநிலையும் $CO_2$ உம் ஆகும்.

22. மெண்டலின் முதலாவது விதியினால் எடுத்துரைக்கப்படுவது,
    (1) பரம்பரையலகுகள் எப்பொழுதும் ஒன்றாகக் காணப்படும் என்பதாகும்.
    (2) சூழலினால் மாத்திரமே இயல்புகள் கட்டுப்படுத்தப்படும் என்பதாகும்.
    (3) புணரிகள் தோன்றும்போது அல்லீல்கள் வேறாகும் என்பதாகும்.
    (4) ஆட்சியுடைய இயல்புகளே பாரம்பரியமடையும் என்பதாகும்.
    (5) அனைத்து எச்சங்களும் சர்வசமனானவை என்பதாகும்.

23. ஆளுகைச் சூழல் விவசாயம் (CEA),
    (1) தாழ்நாட்டு உலர் வலயத்தில் மாத்திரமே மேற்கொள்ளப்படலாம்.
    (2) தாழ்நாட்டு ஈர வலயத்தில் மாத்திரமே மேற்கொள்ளப்படலாம்.
    (3) மத்திய நாட்டு இடை வலயத்தில் மாத்திரமே மேற்கொள்ளப்படலாம்.
    (4) மேல்நாட்டு ஈர வலயத்தில் மாத்திரமே மேற்கொள்ளப்படலாம்.
    (5) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் மேற்கொள்ளப்படலாம்.

PAST PAPERS WIKI

24. பயிர்செய் நிலங்களில் பீடை முகாமைத்துவத்தில் பயன்படுத்தத்தக்க பௌதிக முறையொன்றுக்கான உதாரணமாக அமைவது,
    (1) அடிக்கட்டைகளையும் தாவர மீதிகளையும் அகற்றுதல் ஆகும்.
    (2) மண்ணை சூரிய வெப்பத்துக்கு உட்படுத்தல் ஆகும்.
    (3) பங்கசு நாசினி பிரயோகித்தல் ஆகும்.
    (4) உயிரியல் காரணிகளைப் பயன்படுத்தல் ஆகும்.
    (5) பயிர்செய் நிலத்தை ஆழமாக உழுதல் ஆகும்.

25. "முதலாவது பயிர், முதிர்ச்சி நிலையை அடைந்த பின்னர் அப்பயிரின் விளைச்சலை அறுவடை செய்ய முன்னர் அப்பயிர்செய் நிலத்தில் இரண்டாவது பயிரொன்று அறிமுகஞ் செய்யப்படும்" இவ்வாறான பயிர்ச்செய்கைத் தொகுதி எவ்வாறு அழைக்கப்படும்?
    (1) கலப்புப் பயிர்ச்செய்கை (2) இடைப் பயிர்ச்செய்கை
    (3) சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை (4) நிரற் பயிர்ச்செய்கை
    (5) அஞ்சற் பயிர்ச்செய்கை

Past Papers Wiki



**26.** மண்ணீர் தொடர்பான இரண்டு கூற்றுகள் வருமாறு

A - புவியீர்ப்பு நீர் என்பது புவியீர்ப்பு காரணமாக மண்ணின் ஊடாக கீழ்நோக்கி வடியும் நீர் ஆகும்.

B - ஈரப்பதனக் கவர்ச்சி (hygroscopic) விசை காரணமாக மண் துணிக்கைகளைச் சூழ மெல்லிய படலமாக ஒட்டியிருக்கும் நீர் பருகுநீர் ஆகும்.

மேற்குறித்த கூற்றுகளில்,

(1) A சரியானது B பிழையானது.
(2) B சரியானது A பிழையானது.
(3) A, B ஆகிய இரண்டும் சரியானவை எனினும் அவற்றுக்கு இடையே தொடர்பேதும் கிடையாது.
(4) A, B ஆகிய இரண்டும் சரியானவை என்பதுடன் B யினால் கூற்று A மேலும் விளக்கப்படுகிறது.
(5) A, B ஆகிய இரண்டும் சரியானவை என்பதுடன் A யினால் கூற்று B மேலும் விளக்கப்படுகிறது.

**27.** மண்ணொன்று புலக்கொள்ளவை அடைந்துள்ள போது,

(1) மண்ணில் உள்ள நீர், மயிர்த்துளை விசை மூலம் பெருந்துளைவெளிகளில் தேக்கி வைக்கப்படும்.
(2) மண்ணில் உள்ள நீர், மயிர்த்துளை விசை மூலம் நுண் துளைவெளிகளில் தேக்கி வைக்கப்படும்.
(3) புவியீர்ப்பு நீர், நுண் துளைவெளிகளிலிருந்து முற்றுமுழுதாக வடிந்து சென்றுவிடும்.
(4) மண்ணில் உள்ள நீர், மயிர்த்துளை விசையின் மூலம் பெருந்துளைவெளிகளிலும் நுண் துளைவெளிகளிலும் தேக்கி வைக்கப்படும்.
(5) மண்ணில் உள்ள நீர், புவியீர்ப்பு விசையின் மூலம் பெருந்துளைவெளிகளிலும் நுண் துளைவெளிகளிலும் தேக்கி வைக்கப்படும்.

**28.** மண் சேதனப் பொருள்கள் தொடர்பான மூன்று கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - மண் சேதனப் பொருள்கள், நுண்ணங்கித் தொழிற்பாட்டுக்கான முதன்மையான சக்தி மூலமாகத் தொழிற்படும்.

B - மட்கு என்பது மண் சேதனப் பொருள்களில் உள்ள கறுப்பு நிறமான உறுதியற்ற பகுதி ஆகும்.

C - வெதுவெதுப்பான வெப்பநிலை, நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டைத் துரிதப்படுத்துவதோடு மண் சேதனப் பொருள்களின் அளவைத் துரிதமாக அதிகரிப்பதற்கு வசதியளிக்கும்.

இக்கூற்றுகளில் சரியானது / சரியானவை

(1) A மாத்திரம் ஆகும்.
(2) B மாத்திரம் ஆகும்.
(3) C மாத்திரம் ஆகும்.
(4) A, B ஆகியன மாத்திரம் ஆகும்.
(5) A, C ஆகியன மாத்திரம் ஆகும்.

● கூட்டெரு தயாரித்தலின் வெவ்வேறு படிமுறைகள் கீழே உள்ள வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன. **29** ஆம் இலக்க வினாவுக்கு விடையளிப்பதற்கு இதனைப் பயன்படுத்துக.




**29.** மேற்குறித்த வரிப்படத்தில் 'P' எனும் கட்டத்தில்,

(1) தாவர நோயாக்கிகளும் களை வித்துகளும் அழியும்.
(2) நச்சுத்தன்மையுள்ள தாவரச் சேர்வைகள் பிரிகையடையும்.
(3) உயர் வெப்பநிலை காரணமாக எல்லா நுண்ணங்கிகளும் இறக்கும்.
(4) எல்லா நுண்ணங்கிகளும் இறப்பதோடு, நச்சுத் தன்மையுள்ள தாவரச் சேர்வைகள் பிரிகையடையும்.
(5) தாவர நோயாக்கிகளும் களை வித்துகளும் அழிவதோடு, நச்சுத்தன்மையுள்ள தாவரச் சேர்வைகள் பிரிகையடையும்.

[பக். 5 ஐப் பார்க்க

**30.** நிலம் பண்படுத்தலின் நன்மைகள் தொடர்பான இரண்டு கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - நிலம் பண்படுத்தல் மூலம் மண்ணின் விளைதிறன் விருத்தியடையும்.

B - மண்ணைப் புரட்டுவதால் தாவரப் பகுதிகள் மண்ணுடன் சேர்வதோடு, மண்ணின் சேதனப் பொருள் அடக்கம் விருத்தியடையும்.

இக்கூற்றுகளில்,

(1) A சரியானது B தவறானது
(2) B சரியானது A தவறானது
(3) A, B ஆகிய இரண்டும் தவறானவை
(4) A சரியானது B யினால் அது மேலும் விளக்கப்படுகிறது
(5) B சரியானது A யினால் அது மேலும் விளக்கப்படுகிறது

● **31** ஆம் இலக்க வினாவுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் வரிபடத்தைப் பயன்படுத்துக.




**31.** மேற்குறித்த வரிபடத்தில் காட்டப்பட்டுள்ள நிலத்துக்கு மிகப் பொருத்தமான வடிகாலமைப்பு முறை

(1) ஆரைக்குரிய முறை ஆகும்.
(2) சமாந்தர வலையமைப்பு முறை ஆகும்.
(3) எழுமாறான முறை ஆகும்.
(4) மீன் (ஹெரிங்) முள்ளு வடிவமைப்பு முறை ஆகும்.
(5) செவ்வக முறை ஆகும்.

**32.** பயிர்களில் ஒளித்தொகுப்பு வீதத்தை உச்சமாக்கும் புற நிபந்தனைகளாக அமைவன,

(1) குறைந்த ஒளிச்செறிவும் உயர் $CO_2$ செறிவும் ஆகும்.
(2) உயர் ஒளிச்செறிவும் சிறப்பான (optimum) நீர் வழங்கலும் ஆகும்.
(3) சிறப்பான வெப்பநிலையும் குறைந்த $CO_2$ செறிவும் ஆகும்.
(4) உயர் ஒளிச்செறிவும் உயர் $O_2$ செறிவும் ஆகும்.
(5) சிறப்பான நீர் வழங்கலும் உயர் $O_2$ செறிவும் ஆகும்.

**33.** மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் செயலற்ற (inert) திண்ம வளர்ப்பு ஊடகத்தை மிக நன்றாக விவரிப்பது, அது

(1) தாவரங்களுக்கு பௌதிக தாங்கியாக மாத்திரம் அமையும் என்பதாகும்.
(2) தாவரங்களுக்கு உயிர்ப்புடன் போசணைக் கூறுகளை வழங்க உதவும் என்பதாகும்.
(3) நுண்ணங்கித் தொழிற்பாட்டை அதிகரிக்கும் என்பதாகும்.
(4) pH பெறுமானத்தைத் தாங்கிக் கொள்ளும் என்பதாகும்.
(5) நுண் போசணைப் பொருள்களை மாத்திரம் விடுவிக்கும் என்பதாகும்.

**34.** விவசாயச் சூழல் முறைமையொன்று தொடர்பான சில நடைமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - இயற்கைச் சமனிலையைப் பேணுவதற்கு உதவும் அங்கிகளின் வாழிடங்களை அழித்தல்.

B - சூழல் நேய விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதால் பயிர் செய்நிலத்தில் உயிர்ப்பல்வகைமை அதிகரிப்பதற்கு வசதியளித்தல்.

C - விருந்துவழங்கித் தாவரங்களைப் பேணுவதன் மூலம் பயிர் செய்நிலத்தில் காணப்படும் இயற்கை எதிரிகளின் குடித்தொகையை அதிகரித்தல்.

D - ஒரே பயிர் செய்நிலத்தில் ஒரே பயிரை நீண்ட காலத்துக்கு மீண்டும் மீண்டும் பயிரிடுதல்.

இவற்றில் பயிர் செய்நிலத்தில் பயிர்ப் பீடைகளின் குடித்தொகை அதிகரிப்பதற்கு பிரதானமாக பங்களிப்புச் செய்வன

(1) A, B ஆகும். (2) A, C ஆகும். (3) A, D ஆகும். (4) B, C ஆகும். (5) B, D ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**35.** களைகள், மிக வினைத்திறனாக வளங்களைப் பற்றிக்கொள்ளும் அதேவேளை பயிர்களை விட விரைவாக வளர்வதோடு அவற்றின் சகிப்புத் தன்மையும் உயர்வானது. அவை, மண்ணினுள் பயிர்களுடன் முதன்மையாகப் போட்டியிடுவது,
(1) போசணைப் பொருள், ஒளி, வளி ஆகியவற்றுக்காகும்.
(2) நீர், வெப்பநிலை, வளி ஆகியவற்றுக்காகும்.
(3) போசணைப் பொருள்கள், ஒளி, வேர் வெளி ஆகியவற்றுக்காகும்.
(4) போசணைப் பொருள்கள், நீர், வேர் வெளி ஆகியவற்றுக்காகும்.
(5) நீர், வெப்பநிலை, வேர் வெளி ஆகியவற்றுக்காகும்.

**36.** தாவர நோய்கள் வெவ்வேறு முறைகளில் பரவுவதோடு, அவற்றின் மூலம் தாவரங்களிற்கு பாதிப்புகள் ஏற்படும். பயிர்செய் நிலத்தில் நோய்களைப் பரப்பும் மிகப் பொதுவான உயிரியல் காரணிகளாவன,
(1) தேனீ, வெண் ஈ ஆகியன ஆகும்.
(2) வெண் ஈ, வித்துக்கள் ஆகும்.
(3) பனிப்பூச்சி, தேனீ ஆகியன ஆகும்.
(4) தும்பி, பழ ஈ ஆகியன ஆகும்.
(5) வித்துக்கள், தும்பி ஆகியன ஆகும்.

**37.** பூச்சிநாசினிகளின் வினைத்திறன், அவற்றில் அடங்கியுள்ள தொழிற்படு சேர்வைகளில் தங்கியுள்ளது. ஓகனோபொசுபேற்று, காபமேற்று ஆகிய கூட்டங்களைச் சேர்ந்த பூச்சிநாசினிகள் முறையே,
(1) டைமீதோவேற்று, காபரில் ஆகும்.
(2) என்டோசல்பான், டைமீதோவேற்று ஆகும்.
(3) காபரில், என்டோசல்பான் ஆகும்.
(4) அலெத்திரின், டைமீதோவேற்று ஆகும்.
(5) அற்ரசின், என்டோசல்பான் ஆகும்.

**38.** பின்வரும் கூற்றுகளில், உணவுகளின் வெப்பமுறைப் பதப்படுத்தல் தொடர்பில் சரியான கூற்று எது?
(1) பாய்ச்சர்முறைப் பிரயோகம் என்பது நோயாக்கிகளை அழிப்பதற்காக உணவைச் சிறிது நேரம் குறித்த வெப்பநிலையில் சூடேற்றுதல் ஆகும்.
(2) தகரத்தில் அடைத்தலின்போது நுண்ணங்கிகளை அழிப்பதற்காக வெப்பம் பயன்படுத்தப்படுவதோடு நீண்டகால களஞ்சியப்படுத்தலுக்காக வெற்றிட முத்திரையிடல் செய்யப்படும்.
(3) மீயுயர் வெப்பநிலைக்கு (UHT) உட்படுத்தி தயாரிக்கப்பட்ட பாலை கட்டாயமாக குளிரேற்றியில் வைத்தல் வேண்டும்.
(4) பிரதானமாக பிளான்சிங் பயன்படுவது உணவைத் தகரத்தில் அடைப்பதற்கு அல்லது குளிரேற்றுவதற்கு முன்னர் கிருமியழிப்பதற்காகும்.
(5) கிருமியழித்தலின் போது, குறைவான அமிலத்தன்மை கொண்ட உணவுகளுக்குச் சார்பாக, உயர் அமிலத்தன்மைக் கொண்ட உணவுகள் கூடுதலான வெப்பநிலைக்கு சூடேற்றப்படும்.

**39.** பழங்களின் முதிர்ச்சியை அளவிடுவது தொடர்பான மூன்று கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - மாம்பழத்தின் கடினத்தன்மையை அளப்பதற்கு வன்மைமானி (firmness meter) பயன்படுத்தப்படும்.
B - அன்னாசியின் அமில மட்டத்தை அளப்பதற்கு பிறிக்ஸ்மானி பயன்படுத்தப்படும்.
C - வாழைக்காயின் விட்டத்தை அளப்பதற்கு வேணியர் இடுக்கிமானி பயன்படுத்தப்படும்.
மேற்படி கூற்றுகளில் சரியானது / சரியானவை
(1) A மாத்திரம் ஆகும். (2) A, B ஆகியன மாத்திரம் ஆகும்.
(3) A, C ஆகியன மாத்திரம் ஆகும். (4) B, C ஆகியன மாத்திரம் ஆகும்.
(5) A, B, C ஆகிய எல்லாம் ஆகும்.

**40.** பழக் கைத்தொழிலில், வணிக மட்டத்தில் காய்களைப் பழுக்கச் செய்வதற்காக எதிலீன் பயன்படுத்தப்படுகிறது. எதிலீன் பிரயோகிப்பதால் ஏற்படும் செல்வாக்கு பற்றிய சரியான கூற்று
(1) எல்லை உச்சமற்ற பழங்களின் சுவாச வீதத்தை அதிகரிக்கும்.
(2) எல்லை உச்சமற்ற பழங்களின் பழுத்தல் செயன்முறையைத் துரிதப்படுத்தும்.
(3) எல்லை உச்சமற்ற பழங்களில் இயற்கையாக எதிலீன் உற்பத்தியாவதைக் குறைக்கும்.
(4) எல்லை உச்ச பழங்களில் சுவாச வீதத்தை அதிகரிக்கும்.
(5) எல்லை உச்ச பழங்களில் இயற்கையாக எதிலீன் உற்பத்தியாவதைக் குறைக்கும்.

[பக். 7 ஐப் பார்க்க

41. அனுராதபுர பிரதேசத்து விவசாயியொருவர் நுவரெலியாவிலுள்ள பண்ணையொன்றிலிருந்து இரண்டு பிரீசியன் பசுக்களைக் கொள்வனவுசெய்து, அவற்றுக்கு தேவையானளவு உயர்தரமான உணவும் வழங்கினார். எவ்வாறாயினும் அப்பசுக்கள் முறையாக வேட்கை நிலையை **அடையவில்லை** எனவும் செயற்கைமுறை சினைப்படுத்தல் பெருமளவில் வெற்றியடையவில்லை என்பதால் பால் உற்பத்தியும் வெகுவாகக் குறைவடைந்துள்ளது என்பதையும் அவதானித்தார். இந்நிலைமைக்கான மிகச் சாத்தியமான காரணம்
(1) வெப்ப அழுத்த நிலை ஆகும்.
(2) நோய்த்தொற்று ஆகும்.
(3) அவரது பண்ணையின் பலவீனமான மனை நிலைமைகள் ஆகும்.
(4) பலவீனமான முகாமைத்துவ நடவடிக்கைகள் ஆகும்.
(5) அனுராதபுர பிரதேசத்தில் நிலவும் நீண்ட உலர் நிலைமை ஆகும்.

42. பசுப்பால், கடும்புப் பால் (colostrum) ஆகியன தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - பசுப்பால் வெள்ளை நிறமானதோடு, கடும்புப் பால் இளமஞ்சள் நிறமானது.
B - பசுப்பாலுடன் ஒப்பிடும் போது கடும்புப் பாலில் புரதம், விற்றமின், கனியுப்புக்கள் ஆகியன அதிகம் அடங்கியிருக்கும்.
C - பசுப்பாலில் மாத்திரம் இலற்றோசு அடங்கியுள்ளதோடு கடும்புப் பாலில் இம்யூனோகுளோபுலின் அடங்கியிருக்கும்.
D - பசுப்பால் மிக ஐதானதாகவும் கடும்புப் பால் செறிவானதாகவும் இருக்கும்.
மேற்படி கூற்றுகளில் சரியானவை,
(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) B, C ஆகியன மாத்திரம். (4) A, B, D ஆகியன மாத்திரம்.
(5) B, C, D ஆகியன மாத்திரம்.

43. நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயியொருவர் எதிர்வரும் போகத்தில் நாட்டரிசிக்குப் பதிலாக கீரிசம்பா பயிரிடத் தீர்மானித்துள்ளார். அதற்காக அவரின் குடும்பத்தினரின் உழைப்புடன், வாடகைக்குப் பெற்ற இயந்திரங்களையும் தனது சொந்தக் காணியினையும் பயன்படுத்துகிறார். அவர் பயன்படுத்திய உற்பத்திக் காரணிகளின் சரியான சேர்மானம்,
(1) நிலமும் உழைப்பும் ஆகும்.
(2) நிலமும் முயற்சியாண்மையும் ஆகும்.
(3) நிலமும் உழைப்பும் மூலதனமும் ஆகும்.
(4) நிலமும் மூலதனமும் முயற்சியாண்மையும் ஆகும்.
(5) நிலமும் உழைப்பும் மூலதனமும் முயற்சியாண்மையும் ஆகும்.

44. உற்பத்திப் பண்டங்களுக்கான கேள்வியினுடன் ஒப்பிடும்போது விவசாயப் பண்டங்களுக்கான கேள்வி,
(1) பல பிரதியீடுகள் காணப்படுகின்றமையினால் அதிக நெகிழ்ச்சி கொண்டது.
(2) நவநாகரிகப் போக்குகளினால் முக்கியமாகத் தீர்மானிக்கப்படும்.
(3) எல்லா வருமான மட்டங்களிலும் வருமானத்துக்கு விகிதசமமாக அதிகரிக்கும்.
(4) அவை அடிப்படைத் தேவைகளாகையால் பொதுவாக விலை நெகிழ்ச்சியற்றது.
(5) சனத்தொகை மாற்றங்களினால் தாக்கத்துக்கு உள்ளாவதில்லை.

45. பண்டமொன்றின் விலை 100 ரூபாயில் இருந்து 80 ரூபாயாகக் குறையும்போது, கேள்வியின் அளவு 50 அலகுகளிலிருந்து 70 அலகுகள் வரை அதிகரிக்கின்றது. மற்றைய எல்லாக் காரணிகளும் மாறாது இருக்கும்போது, கேள்வி வளைகோடு
(1) வலப்புறமாக நகரும் (2) இடப்புறமாக நகரும்
(3) பூரண நெகிழ்ச்சிக்கு உள்ளாகும் (4) பூரண நெகிழ்ச்சியின்மைக்கு உள்ளாகும்
(5) மாறாது இருக்கும்

46. மீன் வியாபாரி ஒருவர் விற்பனைசெய்யும் பதப்படுத்திய மீன் ஒவ்வொரு கிலோகிராமுக்கும் ரூபாய் 50 எல்லை வருமானத்தை ஈட்டுகின்றார். ஒரு கிலோகிராம் மீனைப் பதப்படுத்துவதற்கான எல்லைக் கிரயம் $10 + 5Q$ ஆகும். (இங்கு Q என்பது பதப்படுத்திய கிலோகிராம்களின் அளவு ஆகும்) அவ்வாறாயின், இலாபம் உச்சத்தை அடையும் உற்பத்தி மட்டம்
(1) 6 kg ஆகும். (2) 8 kg ஆகும். (3) 10 kg ஆகும்.
(4) 12 kg ஆகும். (5) 15 kg ஆகும்.

[பக். 8 ஐப் பார்க்க

**47.** 'டித்வா' சூறாவளியின் விளைவாக விவசாய உற்பத்திப் பொருட்களிற்கு சந்தையில் நிகழ்வதற்கு அதிக வாய்ப்பைக் கொண்டிருக்கும் மாற்றங்களாவன,

(1) நிரம்பல் அதிகரித்தலும் கேள்வி குறைவடைதலும் ஆகும்.
(2) நிரம்பல், கேள்வி ஆகிய இரண்டும் அதிகரித்தல் ஆகும்.
(3) நிரம்பல் குறைவடைதலும், கேள்வி மாறாது இருத்தலும் ஆகும்.
(4) நிரம்பல் குறைவடைதலும், கேள்வி அதிகரித்தலும் ஆகும்.
(5) நிரம்பல், கேள்வி ஆகிய இரண்டிலும் மாற்றம் ஏற்படாமை ஆகும்.

**48.** விவசாய வனத் தொகுதியொன்றினை மிக நன்றாக விவரிக்கும் கூற்று எது?

(1) இயற்கையான சூழல் தொகுதியொன்றினை விட நிலைபேறான ஒரு தொகுதி ஆகும்.
(2) மாற்றமடையும் வானிலை மற்றும் காலநிலை நிலைமைகளின் போது இடரை எதிர்நோக்கக்கூடிய ஒரு தொகுதி ஆகும்.
(3) இலங்கையின் உலர் வலயத்தில் நன்கு தாபிக்கப்பட்ட ஒரு தொகுதி ஆகும்.
(4) அதிகரிக்கும் சனத்தொகைக்கு உணவு வழங்குவதற்கான மாற்றுவழியாக அறிமுகஞ் செய்யப்பட்ட ஒரு தொகுதி ஆகும்.
(5) விவசாயத்தையும் காடு வளர்ப்பையும் வலிந்து ஒன்றிணைத்த ஒரு தொகுதி ஆகும்.

**49.** மாடுகளில் காசநோயை (Bovine tuberculosis) ஏற்படுத்துவது,

(1) *Brucella abortus* ஆகும்.
(2) *Leptospira interrogans* ஆகும்.
(3) *Brucella suis* ஆகும்.
(4) *Mycobacterium tuberculosis* ஆகும்.
(5) *Mycobacterium bovis* ஆகும்.

**50.** நவீன விவசாயக் கைத்தொழில் தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - ஒரு விவசாயி காலநிலை மாற்றங்களிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கு பச்சைவீடு (green house) ஒன்றினைப் பயன்படுத்துகிறார்.

B - ஒரு விவசாயி தமது பச்சைவீட்டில் துளிமுறை நீர்ப்பாசனத்தையும் சூரிய வலுவையும் பயன்படுத்துகிறார்.

மேற்படி கூற்றுகளில் சரியானது,

(1) கூற்று A காலநிலை மதிநுட்ப விவசாயத்தைப் (Climate Smart Agriculture) பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
(2) கூற்று B ஆளுகைச் சூழல் விவசாயத்தைப் (Controlled Environment Agriculture) பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.
(3) A, B ஆகிய இரண்டு கூற்றுகளும் சுயாதீனமாக காலநிலை மதிநுட்ப விவசாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
(4) கூற்று A, கூற்று B உடன் இணைவதால் காலநிலை மதிநுட்ப விவசாயத்திற்குப் பங்களிப்புச் செய்யலாம்.
(5) கூற்று B, கூற்று A உடன் இணைவதால் ஆளுகைச் சூழல் விவசாயத்துக்குப் பங்களிப்புச் செய்யலாம்.

* * *

004486

AL/2026/08/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

කෘෂි විද්‍යාව II
விவசாய விஞ்ஞானம் II
Agricultural Science II

08 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

※ இவ்வினாத்தாள் **11** பக்கங்களில் **10** வினாக்களைக் கொண்டுள்ளது.
※ இவ்வினாத்தாள் **A, B** என்னும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **இரண்டு** பகுதிகளுக்கும் விடை எழுதுவதற்கு வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலமாகும்.**

**பகுதி A – அமைப்புக் கட்டுரை (பக்கங்கள் 2 - 10)**

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
※ ஒவ்வொரு வினாவுக்கும் விடப்பட்டுள்ள இடத்தில் விடைகளை எழுதுக. கொடுக்கப்பட்டுள்ள இடம் உமது விடைகளுக்குப் போதுமானது என்பதையும் விரிவான விடைகள் **அவசியமற்றவை** என்பதையும் கவனத்திற் கொள்க.

**பகுதி B – கட்டுரை (11 ஆம் பக்கம்)**

※ **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. உமக்கு வழங்கப்படும் தாள்களை இதற்குப் பயன்படுத்துக. இவ்வினாத்தாளுக்கென வழங்கப்பட்ட நேர முடிவில் பகுதி **A** மேலே இருக்குமாறு **A, B** ஆகிய இரண்டு பகுதிகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய பின்னர் மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
※ வினாத்தாளின் பகுதி **B** ஐ மாத்திரம் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும்.

**பரீட்சகரின் பயன்பாட்டிற்கு மாத்திரம்**

| (08) விவசாய விஞ்ஞானம் - II | | |
|---|---|---|
| பகுதி | வினா எண் | புள்ளிகள் |
| A | 1 | |
| | 2 | |
| | 3 | |
| | 4 | |
| B | 5 | |
| | 6 | |
| | 7 | |
| | 8 | |
| | 9 | |
| | 10 | |
| மொத்தம் | | |

| மொத்தம் | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| குறியீட்டெண்கள் | |
|---|---|
| விடைத்தாள் பரீட்சகர் 1 | |
| விடைத்தாள் பரீட்சகர் 2 | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |
| மேற்பார்வை செய்தவர் | |

03030000188114486

[பக் 2 ஐப் பார்க்க

## பகுதி A - அமைப்புக் கட்டுரை

எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
(ஒவ்வொரு வினாவுக்கும் **100** புள்ளிகள் உரித்தாகும்.)

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

**1.** (A) பயிர் உற்பத்திச் செயன்முறைக்கான உள்ளீடுகள், பிரதான உற்பத்திகள், பக்க உற்பத்திகள் என பிரிவடைகின்றது. பின்வரும் ஒவ்வொரு பயிருக்குமான பிரதான முதன்மை உள்ளீடு, பிரதான உற்பத்தி, பொதுவான பக்க உற்பத்தி ஒவ்வொன்று வீதம் குறிப்பிடுக.

| | பயிர் | பிரதான முதன்மை உள்ளீடு | பிரதான உற்பத்தி | பொதுவான பக்க உற்பத்தி |
|---|---|---|---|---|
| (i) | நெல் | .................................... | .................................... | .................................... |
| (ii) | கரும்பு | .................................... | .................................... | .................................... |

(B) உணவு பதப்படுத்தல் தொழிற்சாலையொன்றில் களஞ்சியங்களின் சாரீரப்பதனை 50% இலும் குறைவாகப் பேணவேண்டியுள்ளது. தொழினுட்ப அதிகாரி ஒருவர் ஈரஉலர் குமிழ் வெப்பமானியொன்றினைப் பயன்படுத்தி களஞ்சியத்தினுள் உலர் குமிழ் வெப்பநிலை 25 °C எனவும், ஈரக் குமிழ் வெப்பநிலை 20.5 °C எனவும் பதிவு செய்துள்ளார்.

**வளியீரப்பதனிய அட்டவணை (Psychrometric Chart)**

| (உலர் குமிழ் வெப்பமானி வெப்பநிலை) (°C) | வெப்பநிலை வேறுபாடு (Temperature Difference) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1.5 | 2.0 | 2.5 | 3.0 | 3.5 | 4.0 | 4.5 | 5.0 | 7.5 |
| | சாரீரப்பதன் (%) [Relative Humidity (%)] | | | | | | | | |
| 10 | 82 | 76 | 71 | 65 | 60 | 54 | 49 | 44 | 19 |
| 15 | 85 | 80 | 75 | 70 | 66 | 61 | 57 | 52 | 31 |
| 20 | 87 | 82 | 78 | 74 | 70 | 66 | 62 | 58 | 40 |
| 25 | 88 | 84 | 81 | 77 | 73 | 70 | 66 | 63 | 47 |
| 30 | 89 | 86 | 82 | 79 | 76 | 73 | 70 | 67 | 52 |
| 35 | 90 | 87 | 84 | 81 | 78 | 75 | 72 | 69 | 56 |

(i) மேலே தரப்பட்டுள்ள வளியீரப்பதனிய (Psychrometric) அட்டவணையைப் பயன்படுத்தி களஞ்சியத்தின் சாரீரப்பதன் மட்டத்தைத் துணிக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(ii) களஞ்சியத்தில் நிலவும் சாரீரப்பதன் சரியான வீச்சினுள் உள்ளதா எனக் குறிப்பிடுக.

..........................................................................................................

(iii) பொதுவாக ஈரக் குமிழ் வெப்பநிலையானது உலர் குமிழ் வெப்பநிலையை விடக் குறைவாக இருப்பது ஏன்?

..........................................................................................................

..........................................................................................................

(iv) ஈரக் குமிழ் அளவின் வீழ்ச்சிக்கும் (depression) சாரீரப்பதனுக்கும் இடையிலான தொடர்பை விளக்குக.

..........................................................................................................

..........................................................................................................

[பக் 3 ஐப் பார்க்க

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

004486

(C) மேற்பரப்பு மண்ணரிப்பானது விவசாய விளைதிறனையும் சூழல் தொகுதியின் நலனையும் குன்றச் செய்யும்.

- கீழே தரப்பட்டுள்ள படம் மேற்பரப்பு மண்ணரிப்பைக் காட்டுகிறது. வினா (i) இற்கு விடையளிப்பதற்கு இப்படத்தைப் பயன்படுத்துக.




(i) மண்ணரிப்புச் செயன்முறையின் P, Q, R ஆகிய பிரதான படிமுறைகள் **மூன்றினையும்** முறையே பெயரிடுக.

(1) P - ........................................................................................

(2) Q - ........................................................................................

(3) R - ........................................................................................

(ii) மழைவீழ்ச்சி காரணமாக நிகழும் மண்ணரிப்பு வகைகள் **நான்கையும்** குறிப்பிடுக.

(1) ........................................................................................

(2) ........................................................................................

(3) ........................................................................................

(4) ........................................................................................

(iii) மேற்பரப்பு மண்ணரிப்பின் நேரடி பாதகமான தாக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ........................................................................................

(2) ........................................................................................

(D) நிலம்பண்படுத்தல் உபகரணங்கள் மூலம் பயிர்ச்செய்கைக்காக மண்ணைத் தயார்ப்படுத்தும் போது, பயிர்மீதிகளைக் கையாளுதல், களைகள் கட்டுப்படுத்தப்படல் மண்ணின் அமைப்பு விருத்திசெய்யப்படல் ஆகியன நிகழும். விவசாயத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படும் நிலம்பண்படுத்தல் உபகரணமொன்றின் படம் கீழே தரப்பட்டுள்ளது. வினா (i), (ii) ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்கு இப்படத்தைப் பயன்படுத்துக.




(i) மேலே படத்தில் காட்டப்பட்டுள்ள நிலம்பண்படுத்தல் உபகரணத்தைப் பெயரிடுக.

........................................................................................

(ii) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள P, Q, R, S ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.

(1) P - ........................................................................................

(2) Q - ........................................................................................

(3) R - ........................................................................................

(4) S - ........................................................................................

Past Papers Wiki



இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(E) மேற்பரப்பு நீர்ப்பாசன முறையொன்று கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது. இல (i) தொடக்கம் (iii) வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு இப்படத்தை பயன்படுத்துக.




(i) இந்த நீர்ப்பாசன முறையைப் பெயரிடுக.

..........................................................................................

(ii) மேற்குறித்த படத்தில் P, Q எனக் குறிக்கப்பட்டுள்ள கால்வாய்களைப் பெயரிடுக.

(1) P - ..........................................................................

(2) Q - ..........................................................................

(iii) விவசாயத்தில் இந்த நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்துவதன் **மூன்று** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................

(2) ..........................................................................

(3) ..........................................................................

100

**2.** (A) உச்ச பயிர்விளைச்சலைப் பெறுவதற்கு ஆவியுயிர்ப்பு, ஒளித்தொகுப்பு போன்ற தாவர உடற்றொழிலியல் செயன்முறைகளை சிறப்பாக நிகழச் செய்வது அவசியமாகும்.

(i) தாவரங்களின் ஆவியுயிர்ப்பின் மீது தாக்கம் விளைவிக்கும் சூழல் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................

(2) ..........................................................................

(ii) பயிர்களில் ஒளித்தொகுப்பு சிறப்பாக நிகழச்செய்வதற்காக கையாளக்கூடிய விவசாய நடைமுறைகள் **நான்கைப்** பட்டியற்படுத்துக.

(1) ..........................................................................

(2) ..........................................................................

(3) ..........................................................................

(4) ..........................................................................

(B) பயிர் விளைதிறனையும் நிலைபேறான தன்மையையும் விருத்திசெய்வதற்குப் பொருத்தமான தாவர இனப்பெருக்க தொழினுட்பத்தைப் பயன்படுத்துவது அவசியமானதாகும்.

(i) தாவரங்களில் இலிங்கமுறை இனப்பெருக்கத்திற்கும் இலிங்கமில்முறை இனப்பெருக்கத்திற்கும் இடையிலான முக்கிய வேறுபாட்டைக் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

[பக் 5 ஐப் பார்க்க

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(ii) பின்வரும் ஒவ்வோர் இனப்பெருக்க முறையினதும் அனுகூலங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.

(1) இலிங்கமுறை இனப்பெருக்கம்

(a) ..............................................................................................................

(b) ..............................................................................................................

(2) இலிங்கமில்முறை இனப்பெருக்கம்

(a) ..............................................................................................................

(b) ..............................................................................................................

(iii) தண்டுத்துண்டங்களில் வெற்றிகரமான வேர்கொள்ளல் நிகழ்வதில் தாக்கம் விளைவிக்கும் அகக் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

(C) தாவர இனவிருத்தி என்பது, சாதகமான இயல்புகளைக் கொண்ட புதிய, உயரிய பேதங்களைத் தோற்றுவிப்பதற்கான தாவரங்களின் மரபணுத்திறனை மேம்படுத்தும் விஞ்ஞானம் ஆகும்.

(i) தாவர இனவிருத்தியின் போது மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் தேர்வு முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(ii) தாவர இனவிருத்தியில், கலப்புப் பிறப்பாக்கம் என்றால் என்ன?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(D) ஆளுகைச் சூழல் விவசாயம் (CEA) என்பது, சிறப்பான தாவர வளர்ச்சியைப் பெறுவதற்கு சூழல் நிபந்தனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக தொழினுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரு நவீன முறையாகும். CEA இல் கட்டுப்படுத்தப்படும் பிரதான சூழல் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

(E) மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இரண்டு நீர்மயவூடகப் பயிர்ச்செய்கை அமைப்புகள் கீழே படங்களில் காட்டப்பட்டுள்ளன. வினா (i), (ii) ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்கு இப்படங்களைப் பயன்படுத்தவும்.

P



Q



(i) மேற்படி P, Q ஆகிய நீர்மயவூடகப் பயிர்ச்செய்கை முறைகளைப் பெயரிடுக.

(1) P - ..............................................................................................................

(2) Q - ..............................................................................................................

[பக் 6 ஐப் பார்க்க

004486

0103000018811448

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(ii) P, Q ஆகிய நீர்மயவூடகப் பயிர்ச்செய்கை அமைப்புக்கள் இரண்டுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு யாது?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

(F) உணவு நற்காப்பு என்பது உணவு பழுதடைவதை நிறுத்துவதற்கான அல்லது பழுதடைவதை தாமதப்படுத்துவதற்கான உணவைப் பதப்படுத்தும் செயன்முறை ஆகும். நற்காப்புச் செய்யப்பட்ட பின்வரும் ஒவ்வோர் உணவினதும் நற்காப்பு முறையையும் கோட்பாட்டையும் குறிப்பிடுக.

| நற்காப்புச் செய்யப்பட்ட உணவு | நற்காப்பு முறை | கோட்பாடு |
|---|---|---|
| (i) யோகட் | ......................... | ......................... |
| (ii) UHT பால் | ......................... | ......................... |
| (iii) ஜாடி (Jaadi) | ......................... | ......................... |
| (iv) பேணியில் அடைத்த உணவு | ......................... | ......................... |

100

**3.** (A) விவசாயச் சூழல் தொகுதியில் வெவ்வேறு வகையான ஆத்துரொப்பொட்டுக்கள் காணப்படுவதோடு, அவற்றில் சாதகமான இனங்களும் பாதகமான இனங்களும் முக்கிய தொழில்களை ஆற்றுகின்றன. இவற்றில் கறையான், வண்டு, குளவி, தேனீ, சிற்றுண்ணி, சிலந்தி ஆகியவற்றின் வரிப்படங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆத்துரொப்பொட்டினையும் பெயரிட்டு, விவசாயச் சூழல் தொகுதியில் அவற்றின் தொழிலைக் குறிப்பிடுக.

| | வரிப்படம் | ஆத்துரொப்பொட்டின் பெயர் | விவசாயச் சூழல் தொகுதியில் ஆற்றப்படும் முக்கிய தொழில் |
|---|---|---|---|
| (i) |  | ......................................... | ......................................... |
| (ii) |  | ......................................... | ......................................... |
| (iii) |  | ......................................... | ......................................... |
| (iv) |  | ......................................... | ......................................... |
| (v) |  | ......................................... | ......................................... |
| (vi) |  | ......................................... | ......................................... |

[பக் 7 ஐப் பார்க்க

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(B) பயிரின் முதிர்ச்சிச் சுட்டிகள் பௌதிக, இரசாயன, உடற்றொழிலியல் என வகைப்படுத்தப்படும் பின்வரும் ஒவ்வொரு வகைக்கும் **ஒவ்வோர்** உதாரணம் தருக.

(i) பௌதிக : ..........................................

(ii) இரசாயன : ..........................................

(iii) உடற்றொழிலியல் : ..........................................

(C) செயற்கையாகப் பழுக்கச் செய்தல் என்பது, புறக் காரணியொன்றினைப் பயன்படுத்தி காய்கள் பழுப்பதைத் தூண்டும் செயன்முறையாகும். காய்கள் பழுப்பதைத் தூண்டுவதற்காகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் பழுக்கவைக்கும் புறக்காரணிகள் **இரண்டைப்** பெயரிடுக.

(i) ..........................................

(ii) ..........................................

(D) பசுவின் உணவுச் சமிபாட்டுத் தொகுதி கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது. வினா (i), (ii) ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்கு இப்படத்தைப் பயன்படுத்துக.




(i) மேற்குறித்த படத்தில் P, Q, R எனக் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பெயரிடுக.

(1) P - ..........................................

(2) Q - ..........................................

(3) R - ..........................................

(ii) Q இனால் காட்டப்பட்டுள்ள பகுதியில் நிகழும் உணவுச் சமிபாட்டின் இறுதி விளைவுகள் **மூன்றினைப்** பெயரிடுக.

(1) ..........................................

(2) ..........................................

(3) ..........................................

(E) கோழி முட்டை என்பது ஓர் பாதுகாப்பான ஓட்டினால் மூடப்பட்டுள்ள உயரிய போசணைப் பண்புடைய புரதம் செறிந்த ஓர் உணவு ஆகும். கோழி முட்டையின் பின்வரும் பகுதிகளின் பிரதான தொழிலைக் குறிப்பிடுக.

(i) ஓட்டு மென்சவ்வு

..........................................

(ii) அல்பியூமின்

..........................................

(F) மாடுகளில் மேற்கொள்ளப்படும் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் என்பது, பரம்பரையலகு ரீதியில் உயரிய காளையொன்றிலிருந்து பெறப்படும் சுக்கிலத்தை செயற்கையாக பசுவின் இனப்பெருக்கத் தொகுதியினுள் மனிதரால் இடப்படும் தொழினுட்பம் ஆகும். இலங்கையில் மாடுகளில் செயற்கை முறைச்சினைப்படுத்தல் அடிக்கடி தோல்வியடைவதில் தாக்கம் விளைவிக்கும் **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக.

(i) ..........................................

(ii) ..........................................

(iii) ..........................................

[பக் 8 ஐப் பார்க்க

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(G) கால்நடை உற்பத்தியும் கோழி வளர்ப்பும் தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவ்வொவ்வொரு கூற்றும் **சரியானதா, பிழையானதா** என எழுதுக.

| **கூற்று** | **சரியானது / பிழையானது** |
|---|---|
| (i) தற்காலத்தில் மேசைக்கான முட்டையையும், இறைச்சியையும் பெறுவதற்காக தூய வர்க்கங்கள் (Pure breeds) பயன்படுத்தப்படுவதில்லை. | .................................... |
| (ii) கையால் பால் கறக்கும் போது முலைக்காம்புகளைப் பிதுக்குதல் தொடக்கத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். | .................................... |
| (iii) ஜேர்சி மற்றும் சிந்தி மாடுகளைக் கலப்புப் பிறப்பாக்கம் செய்வதன் மூலமே அவுஸ்திரேலிய Milking Zebu (AMZ) பிறப்பிக்கப்படுகிறது. | .................................... |

100

**4.** (A) விவசாயியொருவர் 1000 கிலோகிராம் உருளைக்கிழங்குகளை உற்பத்தி செய்வதற்காக, ஏனைய உள்ளீடுகளுக்கு மேலதிகமாக 50 நாள் உழைப்பையும் 100 கிலோகிராம் பசளையையும் பயன்படுத்தினார். (i) தொடக்கம் (vi) வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள வரையைப் பயன்படுத்துக.




(i) மேற்குறித்த வரையைப் பெயரிடுக.

..........................................................................................................

(ii) மேற்குறித்த வரையில் X - அச்சையும் Y - அச்சையும் பெயரிடுக.

(1) X - அச்சு :..........................................................................

(2) Y - அச்சு :..........................................................................

(iii) மேற்குறித்த வரையிலுள்ள P, Q ஆகியவற்றைப் பெயரிடுக.

(1) P ..........................................................................

(2) Q ..........................................................................

(iv) இந்த வரையில் காட்டப்படும் தொடர்பு எவ்வாறானது எனக் குறிப்பிடுக.

..........................................................................................................

(v) இந்த வரையில் R குறித்துக் காட்டும் புள்ளியைப் பெயரிடுக.

..........................................................................................................

(vi) R புள்ளியினால் உருளைக்கிழங்கு விவசாயிக்குக் கிடைக்கும் **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................

(2) ..........................................................................

(B) ஒன்றிணைந்த விவசாய முறைமை (IFS) என்பது நிலைபேறான ஒரு விவசாய அணுகுமுறையாகும்.

(i) இந்த விவசாய முறைமையின் பிரதான கூறுகள் **மூன்றினையும்** பட்டியலிடுக.

(1) ..........................................................................

(2) ..........................................................................

(3) ..........................................................................

[பக் 9 ஐப் பார்க்க

(ii) இந்த விவசாய முறைமையின் பிரதான அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(C) பூச்சிநாசினிப் பிரயோகத்தின் போது அடிக்கடி இரசாயன நஞ்சாக்கம் நிகழுகின்றது. இந்த ஆபத்தைக் குறைப்பதற்காக பூச்சிநாசினி பிரயோகிக்கும் செயன்முறைக்கு முன்னரும் செயன்முறையின்போதும் பின்னரும் விவசாயிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அச்செயன்முறையின் போதான பின்வரும் ஒவ்வொரு படிமுறையின்போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை ஒவ்வொன்று வீதம் எழுதுக.

(i) பூச்சிநாசினி பிரயோகிக்க முன்னர்

....................................................................................................

(ii) பூச்சிநாசினி பிரயோகிக்கும் வேளையில்

....................................................................................................

(iii) பூச்சிநாசினி பிரயோகித்த பின்னர்

....................................................................................................

(D) விவசாயியொருவருக்கு அவரது பயிர்செய்நிலத்தில் ஒரு ஹெக்டயருக்கு 80 kg அளவு நைதரசன் (N) இடவேண்டிய தேவை உள்ளதோடு, அதற்காக அவர் யூரியாவைப் பயன்படுத்த எதிர்பார்க்கின்றார்.

(i) ஒரு ஹெக்டயருக்கு தேவையான யூரியாவின் அளவைக் கணிக்குக.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(ii) அவரது பயிர்செய்நிலத்தின் பரப்பளவு 2.5 ஹெக்டயர் எனின், தேவைப்படும் மொத்த யூரியாவின் அளவைக் கணிக்குக.

....................................................................................................

....................................................................................................

(E) விவசாயி ஒருவருக்கு 10 : 20 : 10 ($N:P_2O_5:K_2O$) விகிதத்தில் 100 கிலோகிராம் பசளைக் கலவை தயாரிக்க வேண்டியுள்ளது. யூரியா (46% N), மும்மை சுப்பர் பொசுபேற்று (TSP) (46% $P_2O_5$) மியூரியேற்றுப் பொற்றாசு (MOP) (60% $K_2O$) ஆகியனவையே அவர் பெறக்கூடிய பசளை வகைகள் ஆகும். மேற்படி பசளைக் கலவையைத் தயாரிப்பதற்கு பயன்படுத்த வேண்டிய ஒவ்வொரு பசளையின் அளவையும் நிரப்பியின் (filler) அளவையும் கணிக்க வேண்டியுள்ளது.

(i) இப்பசளைக் கலவையில் அடங்கியிருக்க வேண்டிய போசணைக் கூறுகளின் ($N, P_2O_5, K_2O$) அளவைக் (கிலோகிராமில்) கணிக்குக.

(1) N (kg)

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(2) $P_2O_5$ (kg)

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

[பக் 10 ஐப் பார்க்க

Past Papers Wiki

(3) $K_2O$ (kg)

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(ii) இப்பசளைக் கலவையைத் தயாரிப்பதற்குத் தேவையான அந்தப் பசளை வகைகளின் (யூரியா, TSP, MOP) அளவு (kg) யாது?

(1) யூரியா

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(2) TSP

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(3) MOP

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(iii) இப்பசளைக் கலவைக்குத் தேவையான நிரப்பிப் பொருளின் அளவு (kg) எவ்வளவு?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(F) காலநிலை மாற்றம் என்பது பூகோள வெப்பநிலையிலும் வானிலைக் கோலங்களிலும் நீண்டகால ரீதியில் நிகழும் மாற்றங்கள் ஆகும்.

(i) 'எல் நினோ' தாக்கம் என்றால் என்ன?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(ii) 'லா நினா' தாக்கம் என்றால் என்ன?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

100

PAST PAPERS WIKI

❊❊

[பக் 11 ஐப் பார்க்க



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

කෘෂි විද්‍යාව II
விவசாய விஞ்ஞானம் II
Agricultural Science II

08 T II

## பகுதி B - கட்டுரை

**அறிவுறுத்தல்கள் :**

※ **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதவும்.
※ தேவையான இடங்களில் தெளிவான பெயரிடப்பட்ட வரிப்படங்கள் வரைக.
(ஒவ்வொரு வினாவுக்கும் **150** புள்ளிகள் வழங்கப்படும்)

**5.** (i) மண்ணின் சுகாதாரத்தையும் நிலைபேறான தன்மையையும் மேம்படுத்துவது தொடர்பில் உயிரிப் பசளைகளின் பாங்கை விவரிக்குக.

(ii) இலங்கையின் பிரதான இரண்டு பயிர்செய்கைப் போகங்கள் மற்றும் மழைவீழ்ச்சிக் கோலத்தை அடிப்படையாகக் கொண்ட நான்கு பருவகாலங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பை விளக்குக.

(iii) மண்ணின் பிரதான கூறுகளைப் பெயரிட்டு, பயிர்களின் விளைதிறனில் அவற்றின் தாக்கத்தை விளக்குக.

**6.** (i) இலங்கையில் விவசாயத்துறை விருத்திக்கு கூட்டுறவுக் கம்பனிகளின் முக்கியத்துவத்தை விவரிக்குக.

(ii) பொருத்தமான விளக்கப்படங்களைப் பயன்படுத்தி தீவிர முறையில் பாற்பசுக்களை வளர்ப்பதற்குப் பொருத்தமான வெவ்வேறு வகையான மனைகளை விவரிக்குக.

(iii) சாய்வான ஒரு நிலத்தைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவதற்கென தயார் செய்யும்போது பின்பற்ற வேண்டிய முக்கியமான நடைமுறைகளை விவரிக்குக.

**7.** (i) ஆழ்கூள (deep litter) மனையொன்றில் முட்டையிடும் கோழிகளைப் பராமரித்தலுடன் தொடர்புடைய முக்கியமான வளர்ப்பு முகாமைத்துவ நடைமுறைகளை விவரிக்குக.

(ii) துளிமுறை நீர்ப்பாசனத்தையும் தூவல்முறை நீர்ப்பாசனத்தையும் அவற்றின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் சுட்டிக்காட்டி ஒப்பிடுக.

(iii) பயிர்களின் ஆவியுயிர்ப்பைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தையும் ஆவியுயிர்ப்பைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் விவரிக்குக.

**8.** (i) வித்துக்களின் வாழ்தகவின் மீது தாக்கம் விளைவிக்கும் காரணிகளை விவரிக்குக.

(ii) மண்ணின்றிய பயிர்ச்செய்கைக்காக ஊடகமொன்றைத் தெரிவுசெய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகளை விவரிக்குக.

(iii) ஆக்கிரமிப்பு களைகளின் பரம்பல் முறைகளையும் பயிர் உற்பத்தி மீது அவற்றின் தாக்கத்தையும் விவரிக்குக.

**9.** (i) தாவரங்களில் நோயின்மை, சிறிது நோய்வாய்ப்பட்டிருத்தல், தீவிரமாக நோய்வாய்ப்பட்டிருத்தல் ஆகிய நிலைமைகளை நோய் முக்கோணியின் துணையுடன் விளக்குக.

(ii) இலங்கையில் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளின் மீது தாக்கம் விளைவிக்கும் காரணிகளை விவரிக்குக.

(iii) விவசாயத்துறையில், விவசாயியின் வருமானத்தை அதிகரிப்பதற்கு பெறுமானச் சங்கிலிப் பகுப்பாய்வைப் பயன்படுத்தக்கூடிய விதத்தை விளக்குக.

**10.** (i) மனித போசணையில் காபோவைதரேற்று, புரதம் ஆகியவற்றின் தொழில்களை விவரிக்குக.

(ii) கலப்புப் பயிர்ச்செய்கைத் தொகுதிக்கான பயிர்களைத் தெரிவுசெய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய இயல்புகளை விவரிக்குக.

(iii) விவசாய வணிக முகாமையின் நான்கு படிமுறைகளை விவரிக்குக.

PAST PAPERS WIKI
www.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library